# சிறப்பு சார்பு நீதிமன்றம் (LAOP) எண்.2 , ஜெயங்கொண்டம்

| | | | |
|---|---|---|---|
| வழக்கு | : OS.38/2020 | கிராமம் | : நெட்டலகுறிச்சி |
| சாட்சி | : பி.வா.சா–2 | வட்டம் | : உடையார்பாளையம் |
| பெயர் | : மலர்கொடி | வயது | : 58 |
| க/பெ | : கலியபெருமாள் | தொழில் | : வீட்டு குடித்தனம் |

2026–ம் ஆண்டு ஜுன் 24 –ம் நாள் (1969–ம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.தனஞ்செயன், கிரேடு–II பெஞ்ச் கிளர்க் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

## முதல் விசாரணை

நான் இவ்வழக்கில் 3ம் பிரதிவாதி. பி.வா.சா.2 ஆக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை என்னுடைய முதல் விசாரணையாக ஏற்க வேண்டுகிறேன். இந்த பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது. அதில் சொல்லப்பட்ட விவரங்களை நான் படித்துப்பார்த்து சரி என்று என்னால் ஒப்புக்கொள்ளப்பட்டு நான் என்னுடைய கையொப்பங்களை இட்டேன்.

## வாதி தரப்பு குறுக்கு விசாரணை

வாதி சிவசங்கரி என்னுடைய மகள் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் அனைத்தும் பொதுக்குடும்ப சொத்துக்கள் என்றால் சரிதான். வாதி வழக்கில் கோரியபடி தீர்ப்பு செய்வதில் எனக்கு ஆட்சேபனை இல்லை. திருக்களப்பூர் கிராமத்தில் உள்ள சொத்துக்கள் எனது குமாரர் கார்த்திகேயன் பெயரில் கிரையம் பெறப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். அந்த சொத்துக்களை நானும், வாதி மற்றும் 1ம் பிரதிவாதி அனைவரும் ஒன்று சேர்ந்துதான் கிரையம் கொடுத்துள்ளோம்

என்றால் சரிதான். இதுநாள் வரையில் எங்களுக்குள் தாவா சொத்தை பற்றி எந்தவித பாக பிரிவினையும் ஏற்பட்டதில்லை. நானும் எனக்குன்டான 1/3 பாக சொத்துக்களை பொருத்து Statement உடன் நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளேன். எனது பாகத்தை வாதி ஏற்றுக்கொண்டுள்ளார். வாதிக்கு தாவா படி தீர்ப்பு செய்வதில் எனக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் வைத்து சாட்சி சொன்னவை என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

/ ஒப்பம் / V. பிரேம்குமார்,
சிறப்பு நீதிபதி எண்.2,
ஜெயங்கொண்டம்.